RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2242

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# சமயம்சார் கோட்பாட்டு சடங்குகளில் குலக்குறியவாதம்: ஒரு சமூக மானிடவியல் நோக்கு

ராஜேந்திரன் கிருஷிகா [அ,*]

[அ] சமூக விஞ்ஞானங்கள் துறை, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# Totemism in Religious Theories: A Social Anthropological Perspective

**Rajendran Kirushikkah [a,*]**

[a] Department of Sociology & Anthropology, Department of Social Sciences, Eastern University, Sri Lanka
*Corresponding author Email: kirushi83@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2242
Received: 13-07-2022; Revised: 09-10-2022; Accepted: 20-10-2022; Published: 05-11-2022

**Abstract:** From the point of view of Social Anthropology, the rituals associated with religion and its upright modes of worship convey something to each individual and society. Among the rituals, the totemism propounded by the author explains the origin of religion and explains in detail how its effectiveness is established in society. In particular, this study includes the issues of religious rituals, the origin of Totemic religion, Totemic worship, its characteristics, and the position of Totemic worship in society. Therefore, the purpose of this study is to explain the performance, characteristics, and stability of Totemic worship, which is one of religious worship, from a social and anthropological point of view.

**Keywords:** Social Anthropology, Totemic Religion, Totemic Worship, Society.

## முன்னுரை

மனிதன் தனது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சமூகத்தில் ஒருமைப்பாட்டுடன் வாழவும், சமூகத்தின் சீரான இயக்கத்திற்குமான பல்வேறு ஒழுக்கவிதிகளையும் கடைப்பிடிக்க சமூகத்தில் பல்வேறு சமூக நிறுவனங்களுடன் ஒன்றித்து வாழ்ந்தான். இத்தகைய தன்மைகளை ஏற்படுத்தும் நிறுவனங்களாக குடும்பம், சமயம், கல்வி, அரசியல், பொருளாதாரம் ஆகியவை காணப்பட்டாலும் மனிதனை சமூகத்துடன் தொடர்புபடுத்தும் நிறுவனமாக 'சமயம்' காணப்படுவதோடு சமூகத்தின் நிலைப்பிற்கு மக்களை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்கின்ற நிறுவனமாகவும் காணப்படுகின்றது. இதனால் சமூக நிறுவனங்களுள் 'சமயம்' என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. இதனடிப்படையில் சமயம் தொடர்பான பொதுவான வரையறையை நோக்கும் போது மனித வாழ்க்கைக்கு அர்த்தம் வழங்கத்தக்கதுமான அதீத நம்பிக்கை சார்ந்த சில புனித கூறுகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட நம்பிக்கைகள், குறியீடுகள் ஆகியவற்றின் கூட்டிணைப்பு என வரையறுக்கப்படுகின்றது (Bhaktavatsala Bharathi, 2018).

சமூகவியல் சார்ந்து சமயம் எனப்படுவது மனித வாழ்க்கையோடு தொடர்புபட்ட அனுபவங்கள் அவதானிப்புக்களிலிருந்து பொதுமையாக்கம் செய்து தொகுத்தெடுத்து சாராம்சப்படுத்தி மனித பகுத்தறிவு, உலகம் பற்றிய புரிந்து கொள்ளலையும், கண்டறிவதற்கான மனித உந்துதலின் விளைபேறுதான் சமயம் என சமூகவியல் கூறுகின்றது. சமூகமானது தன் இயங்கியல் தன்மையில் நிலைத்து நின்று செயற்பட சமூக ஒழுங்கு, ஒருமைப்பாடு, கட்டுப்பாடு என்பன அவசியமானவையாகக் காணப்படுகின்றது. இத்தகைய நிலையினை சமூகத்தில் பேணுகின்ற அடிப்படை அலகாக சமயம் காணப்படுகின்றது.

புனிதத்தன்மை என்னும் பிரம்மையைத் தோற்றுவித்து அதன் மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வில் இரண்டாம் கட்டமாக 'சடங்குகள் (rituals)' ஏற்பட்டன. இச்சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படும் புனிதத் தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும். புனிதத் தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல் சடங்குகளாகும். இது வழிபாட்டம்சமாகவும் கொள்ளப்படுகின்றது. இவ்வகையான சடங்குகளுள் ஒன்றாகவே குலக்குறிய வழிபாடும் கொள்ளப்படுகின்றது.

## குலக்குறிய வழிபாட்டின் தோற்றம்

சமயத்தின் தோற்றம் குறித்த கொள்கைகளின் வெளிப்பாடே குலக்குறியவாதத்தின் தோற்றமாகும். சமுதாய அறிவியல்களில் பெரும்பாலும் ஓர் அறிஞருடைய கொள்கையை அல்லது கருத்தை மற்ற அறிஞர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதை ஒட்டியும் வெட்டியும் பேசும் போக்கு காலந்தொட்டு நடந்துவருவதாகும். இதனால் ஒரே பொருள் குறித்த ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் உள்ளதைக் காணமுடிகின்றது. இந்நிலை சமயத்தின் தோற்றம் பற்றிய கருத்துகளுக்கும் பொருந்தும். சமயத்தின் தோற்றம் குறித்து முதலில் எழுந்த கொள்கையையும் அதனை ஒட்டியும் எதிர்த்தும் எழுந்த கொள்கைகளும் ஒன்றே குலக்குறியவாதம் (Totemism) ஆகும். இது எமைல்டுர்கைமின் கொள்கையாகவும் கருதப்படுகின்றது.

அதாவது தொன்மைச் சமயம் தோன்றிய முறை குறித்து டுர்கைம் ஒரு புதிய கருத்தை முன்வைக்கிறார். 'சமய வாழ்வின் தொடக்க நிலைகள் (The Elementary Forms of Religious Life, 1912) எனும் நூலில் இதைப் பற்றி எழுதும் போது இன்றுள்ள சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி (Totem) நம்பிக்கையில் இருந்து வளர்ச்சி பெற்றவையாகும் எனக் கூறுகிறார் (Durkheim, 2001). அதாவது இன்றுள்ள சமய முறைகளில் என்னென்ன பண்புகள் இன்றியமையாதன எனக் கருதப்படுகிறதோ (வழிபாட்டுப் பொருள், அது பற்றிய நம்பிக்கை, நம்பிக்கையில் உறுதி கொண்டுள்ளோர், சடங்குகள் செய்தல் போன்றவை) அவை அனைத்தையும் கொண்ட ஆரம்பகாலச் சமயமாக குலக்குறிச் சமயம் தோன்றியது என்கிறார். எனவே சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய (Sacred Thing) நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறை என்பது இக் குலக்குறிய வாதத்தினூடாகவே வெளிப்படுகின்றது.

## குலக்குறி (Totem) மற்றும் குலக்குறிய வாதம் (Totemism)

இன்று குலக்குறி என்னும் பொருளில் பேசப்படும் 'Totem' என்னும் ஆங்கிலச் சொல் கிழக்கு வட அமெரிக்காவிலுள்ள அல்கான்கின் (Algonkin) பழங்குடியினர் வழங்கும் 'ஆட்டோதீமன் (Ototeman)' என்னும் சொல்லோடு தொடர்புடையது. இவற்றினடிப்படையில் குலக்குறிய வாதம் என்பது ஆங்கிலத்தில் Totemism என அழைக்கப்படுகின்றது. Totem எனும் சொல்லானது Ojibwa என்ற வட அமெரிக்க மொழியிலிருந்து தோன்றியதாகும். இச்சொல்லானது என்ற கருத்தை உயர்த்துகின்றது. அதாவது குலக்குறி என்பது ஆவி, புனிதப்பொருள் போன்றவற்றைக் குறிக்கின்ற இயற்கைப் பொருளாகும். அதாவது குடும்பம், வம்சம், பழங்குடி, குலம் உள்ளடங்கிய குழுக்களைக் குறிக்கும் புனித சின்னம் எனப் பொருள்படுகின்றது.

பழங்குடியினர் வழங்கும் ஆட்டோதீமன் (Ototeman)' என்னும் சொல்லுக்கு அவர்களின் மொழியில் 'உடன்பிறந்தான் - உடன்பிறந்தாள் உறவு (Brother - Sister Kin) என்று பொருள். இச்சொல்லின் வேர்ச்சொல்லான 'ஒத்தி (Ote)' என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்பது பொருள். வட அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் பகுதியில் வணிகம் செய்யச் சென்ற ஆங்கிலேயர் ஒருவர் மூலம் கி.பி. 1792 இல் இந்தச் சொல் ஆங்கிலேயர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டு 'Totem' எனத் திரிபுற்றது (Goswami, 2018).

குலக்குறி அல்லது குலமரபுச் சின்னம் என்பது குறி அல்லது அடையாளத்தைக் குறிக்கும். ஓர் இனத்தைப் பாதுகாக்கின்ற ஆவி வாழ்வதாக நம்பப்படுகிற விலங்கு அல்லது தாவரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சின்னமாக இக்குலக்குறி பயன்படுத்தப்பட்டது. குலக்குறி இனக்குழுச் சமுதாயத்தின் ஓரியல்பாக கருதப்படுகின்றது. குலக்குறியாக விலங்குகள், தாவரங்கள், இயற்கைப் பொருள்கள் ஆகியவை முதன்மையான பொருட்களாக அமைகின்றன.

குலக்குறி அமைப்புடைய சமூகங்களில் குலக்குறியின் செயற்பாடு சமூகத்தின் பல நிறுவனங்களோடு தொடர்புபட்டதாக காணப்படும். குறிப்பாக திருமணமுறை, உறவுமுறை, வழிபாட்டு முறை, உணவு முறை போன்றவற்றோடு இது மிகவும் நெருக்கமான செயலுறவைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு சமூகத்திலும் அந்தச் சமூகத்தவர் குலக்குறியோடு கொண்டுள்ள நடைமுறைகள், நம்பிக்கைகள், செயற்பாடுகள் முதலானவற்றின் தொகுப்பே குலக்குறியம் (Totemism) ஆகும்.

## குலக்குறிவாதம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்

எமைல்டுர்கைம் (Emile Durheim): தொன்மைச் சமயம் குறித்த சிந்தனையில் எமைல்டுர்கைம் (Emile Durheim) முன்வைத்த கோட்பாடு குலக்குறியவாதம் (Totemism) ஆகும். இவர் தனது நூலான 'சமய வாழ்வின் தொடக்க நிலைகள் (The Elementary Forms of Religious Life, 1912) எனும் நூலில் இன்றுள்ள சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி (Totem) நம்பிக்கையில் இருந்து வளர்ச்சி பெற்றவையாகும் எனக் கூறுகிறார் (Durkheim, 2001). மதம் தொடர்பான எண்ணக்கருவாக்கம் ஒன்றினை உருவாக்கும் பொருட்டு டுர்கைம் புனிதம் - புனிதமின்மை (Sacred and Profane) என்னும் இரு எண்ணக்கருக்களை விளக்குகின்றார். புனிதத்துவம் தொடர்பான கருத்தினைத் டுர்கைம் குலக்குறி, புராதன வழிபாட்டுக் குழு (Primitive cult), சடங்குகள், நம்பிக்கைகள் மூலமாக விளக்க முற்படுகின்றார். மதம் தொடர்பான ஆரம்ப கோட்பாடுகளான ஆவியுலகம், இயற்கைவாதம் (Animism and Naturism) என்பன இயற்கையின் சில தோற்றப்பாடுகளின் அடியாக மனிதர்கள் மத்தியில் எழுகின்ற ஒருவகைப் புலனுணர்வின் உந்துதல் 'தெய்வீகத் தன்மை' பற்றிய உணர்வு தோன்றக் காரணமாக அமைகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது (Shanmugalingan, 2008). ஆவிக் கொள்கையாளர்கள் கனவினையும், இயற்கைக் கொள்கையாளர்கள் உலகின் சில தோற்றப்பாடுகளையும் மதத்தின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்பமாக கருதுகின்றனர். இவ்விரு கொள்கைகளையும் தாண்டி குலக்குறியக் கொள்கையே மேற்கூறப்பட்ட இரு கொள்கைகளின் தோற்றத்திற்கு காரணம் என்பது டுர்கைமின் கருத்து. குலக்குறியக் கொள்கை என்பது ஒரு மதக் கொள்கையாகும். குலக்குறி சார்ந்த பொருட்கள் புனிதப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. அதாவது குறித்த ஒரு மரம், அல்லது ஒரு விலங்கு, குறித்த ஒரு குழுவினருக்குப் புனிதப் பொருளாகவும் அவர்கள் சார்ந்த குழுவின் குலக்குறியாகவும் விளங்குகின்றது. குலக்குறி தொடர்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகளும் பின்பற்றப்படும் நம்பிக்கைகளும் அதன் புனிதத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது என்கிறார். எனவே ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் (Social mind) ஒன்றுபட்ட வெளிப்பாடாக (Collective Representation) அமையப்பெற்றதே குலக்குறி என்பார்.

மக்லீன் (J. F. McLennan): குலக்குறி அமைப்புடைய சமூக நிலையே தொடக்ககாலச் சமூக முறை என்றும் இந்நிலையைக் கடந்த பின்னரே இன்றுள்ள அனைத்து வகையான சமூகங்களும் வளர்ந்துள்ளன என்று கருதினார்.

ஆண்ட்ரூ லாங் (Andrew Lang): உலகின் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த மனிதக் குழுவினர் அவரவர் இயற்கைச் சூழலில் காணப்பட்டவற்றினுள் சிறப்பானதொன்று வாழ்விற்கு முதன்மையானது எனக் கருதியதால் அதனை அவர்தம் குலக்குறியாக ஏற்றுக் கொண்டனர்.

பிரேசர் (Frazer): இவர் 1910இல் நான்கு தொகுதிகளாக வெளியிட்ட குலக்குறியமும் புறமணமும் (Totemism and Exogamy) என்னும் நூல்வரிசை குலக்குறி குறித்த விரிவான முன்னோடி ஆய்வாகும். ஆங்கிலேய மானிடவியலாளரான இவர் ஆஸ்திரேலிய, மெலனீசிய முதுகுடிகளின் குலக்குறி முறைகளை விரிவாக ஆராய்ந்தார். முதுகுடிகளின் குழந்தைப் பிறப்பு பற்றிய நம்பிக்கையே குலக்குறியின் தோற்றத்திற்கு வழிகோலியது என்று கூறினார்.

லார்டு ஆல்பரி: இயற்கைப் பொருட்களை வணங்கியதிலிருந்து குலக்குறி தோன்றியது என்கிறார். வணங்கப்பட்ட தாவரம், விலங்கு, இயற்கைப் பொருள் ஆகியன முதலில் தனிமனிதனுக்கும் பின்னர் குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது என்றும் அதுவே பின்னர் அந்தக் குழுவின் குலக்குறியாகவும், பெயராகவும் மாறியது என்றார்.

வில்கம் ஸ்மித்: தொன்மைக் குடியினர் தங்கள் உயிரை விலங்கின் உடலிலோ, இயற்கைப் பொருளிலோ வைக்க இயலும் என நம்பினர். அவர்களின் உயிரை வேற்றுப் பொருள்களில் வைத்துவிட்டால் அவர்களை எவரும் அழிக்கமுடியாது எனவும் அப்பொருள் அழிக்கப்பட்டால்

அவர்களும் அழிந்து போவார்கள் என நம்பினர். தம் சுற்றுச் சூழலிலுள்ள சிறப்பானதொரு பொருளிலே அதை வைக்க இயலும் என நம்பியதால் அதைக் குலக்கிறியாகக் கொண்டு அதற்கு தீங்கு இழைக்காமல் கொல்லாமலும், உண்ணாமலும் காத்து வந்தனர் என்றார்.

வில்கெம்: மனிதர்களின் ஆவி விலங்குகளிடம் சென்று உறையும் என்னும் நம்பிக்கையில் ஏற்பட்டதே குலக்குறி.

ஏ.சி.ஹாடன்: அயலார் ஒரு கூட்டத்தினரைக் குறிப்பிடும் போது அம்மக்கள் எவ்வகை உணவை மிகுதியாக நம்பி இருந்தார்களோ அதன் பெயரால் குறிப்பிடத் தொடங்கியதால் ஏற்பட்டதே குலக்குறி என்றார்.

சிக்மன்ட் பிராய்ட்: இயற்கைச் சூழலுடன் ஓர் இரத்த உறவுடைய கூட்டத்தினர் உள்ளார்ந்த மனநிலையில் கொள்ளும் உறவே குலக்குறி என்பார்.

வெர்ரியர் எல்வின்: ஓர் எதிர்பாராத வரலாற்று நிகழ்வால் ஏற்பட்ட கருத்து பல இடங்களில் வாழ்ந்த குடியினரிடம் பரவியதால் குலக்குறி நம்பிக்கை தோன்றியிருக்கலாம் என்றார்.

Webster's dictionary - இது பொதுவாக ஒரு இயற்கையான பொருள் மற்றும் விலங்கிற்கினை குறிக்கும் ஒரு தனித்துவமான சின்னம் மற்றும் குறியீடு ஆகும்.

Oxford Advanced Learner - குலக்குறியம் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தால் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக நம்பப்படும் ஒரு இயற்கையான பொருள் அல்லது விலங்கு, அது ஒரு சின்னமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

E. A. Hoebel - ஒரு பொருள், விலங்கு மற்றும் தாவரம் இடையே உணர்வு பூர்வமானக் அடையாளத்தின் விசித்திரமான பிணைப்பு இருப்பதாக ஒரு சமூகக் குழுவின் உறுப்பினர்களால் உணரும் குறியீடுகளின் தொகுதியாகும்.

G. Van Der Leeuw - குலக்குறியானது ஒரு குழுவுக்குரிய பொதுவான பெயரைக் கொண்டது, குலக்குறியானது பழங்குடிச் சமுதாயத்தைக் குறிக்கின்றது. குலக்குறியானது விலக்காகக் கொள்ளப்படும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அல்லது சிறப்பு நிலைமைகளின் கீழ் தவிர குலக்குறியைக் கொல்வது அல்லது சாப்பிடுவதற்கு தடை மற்றும் அதற்குள் கலப்புத் திருமணம் செய்யத் தடையாகக் காணப்படும் (Robinson, 2006).

## குலக்குறியின் பண்புகளும் சமூகத்தில் குலக்குறிய வழிபாட்டின் நிலைப்பாடும்

குலக்குறியமானது விலங்கு, தாவரம் அல்லது யாதேனும் ஒரு இயற்கைப் பொருளாகவோ அமைகின்றது. இயற்கை என்பது குலக்குறியத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். உதாரணமாக வடஇந்தியப் பழங்குடியினரான Delhikharia குழுவினர் எட்டுக் குலக்குறிகளைக் கொண்டுள்ளனர். அவை முரா (ஆமை), சோரங்கு (பாறை), சமாத் (மான்), சார்காட், கிரோ, ஹன்ஸ்தா (விலங்கு, மீன்) போன்ற விலங்குகளை குலக்குறியாகக் கொண்டிருக்கும். இந்து சமயத்தில் 'துளசி' என்ற தாவரம் சில குலங்களில் குலக்குறியாகக் காணப்படுகின்றது. கர்நாடகாவில் 'துளு நாட்டின்' பந்த் சமூகத்தினரின் குலத்தின் குறியாக துளசி காணப்படுகின்றது. பந்த் சமூகம் சத்திரிய குலமாக இருந்திருக்கின்றது. இவ்வாறு பல சமூகங்கள் தமது வழிபாட்டு சின்னமாகத் தாவரங்களையும், விலங்குகளையும் பேணி வருகின்றமை குலக்குறியத்தின் சிறப்பியல்பாகக் காணப்படுகின்றது.

குலக்குறிக் கொள்கை என்பது ஒரு மதக் கொள்கையாகும். குலக்குறி சார்ந்த பொருட்கள் புனிதப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. அதாவது குறித்த ஒரு மரம், அல்லது ஒரு விலங்கு, குறித்த ஒரு குழுவினருக்குப் புனிதப் பொருளாகவும் அவர்கள் சார்ந்த குழுவின் குலக்குறியாகவும் விளங்குகின்றது. டுர்கைமைப் பொறுத்தவரையில் குலக்குறியம் என்பது மிகவும் எளிமையான ஆரம்ப நிலையிலுள்ள மதத்தின் ஒரு வடிவமாகும். குலக்குறி தொடர்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகளும் பின்பற்றப்படும் நம்பிக்கைகளும் அதன் புனிதத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

குலக்குறிய வழிபாடானது சமூகத்தில் கூட்டொருமைத் தன்மையையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்துகின்றது. குழுவொன்றின் குலக்குறியானது அக்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு நபரினதும்

குலக்குறியாகும். பொதுவாகக் குலக்குறிச்சின்னமானது விலங்குகளில் இருந்தோ அல்லது மரங்களில் இருந்தோ தெரிவு செய்யப்படலாம். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் குலக்குறியானது விலங்குகளில் இருந்தோ அல்லது மரங்களில் இருந்தே தெரிவுசெய்யப்படுகின்றது. சாதாரணமாகக் குலக்குறி என்னும் போது அது தனித்த ஒரு பொருளைக் குறிப்பதன்று. மாறாக அது முழுமையினைக் குறிக்கின்றது. உதாரணமாக காகம், புலி ஒரு குழுவின் குலக்குறியாயின் பொதுவாகக் காகங்கள், புலிகள் அனைத்துமே குறிப்பிட்ட குழுவின் குலக்குறியாகக் கருதப்படுகின்றன.

குலக்குறி என்பது சாதாரணமான ஒரு பொருளாகவோ, அல்லது பெயராகவோ அல்லது சின்னமாகவோ கருதப்பட முடியாது. அது மதஞ்சார் நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் என்பவற்றோடு தொடர்புபட்ட ஒன்று. அது மத இயல்பினது கூட்டுவடிவமாகவும் காணப்படுகின்றது. அது புனிதம் சார்ந்த ஒன்று. குலக்குறி சார்ந்த அனைத்தும் சடங்குகள், நம்பிக்கைகள், கற்பனைகள் யாவும் புனிதம் சார்ந்தவை. உதாரணமாக இந்து சமயத்தவர்கள் பசு, பன்றி, நாகபாம்பு, துளசிச் செடி, வேப்பமரம் போன்ற பல பொருள்களை புனிதத் தன்மையாகவும், இஸ்லாமியர்கள் பன்றியையும், கிறிஸ்தவர்கள் 'வைன்' ஐயும், பௌத்தர்கள் அரசமரம், யானை போன்றவற்றையும் புனிதத் தன்மையாகவும், குலத்தின் குறியாகவும் கருதி வழிபடுகின்றனர். இதனால் புனிதத்தன்மை பேணப்படுகின்றது.

குலக்குறி ஒரு குழுவிற்கு பொதுவானதாகவோ தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் என்று தனியாகவோ இருக்கும். வட இந்திய பழங்குடியினரான தெல்கி காரியர் முரா (ஆமை), சோரங்கு (பாறை), சமாத் (மான்), சார்காட் (புலி), ஹன்ஸ்தா (விலாங்கு மீன்). இத்தகைய விலங்குகளின் பெயர்கள் தனிப்பட்ட முறையிலும், பொதுவானதாகவும் காணப்படும். இம்மரபு குறித்த குழுவினரின் பரம்பரையை பேணுவதாகவும் அமைந்துள்ளது.

குலக்குறியானது புறமணக் குழுக்களாகவும், கால்வழிக் குழுக்களாகவும் செயற்படுகின்ற தன்மை முக்கியமானது. குலக்குறியானது சமய வாழ்வோடு மட்டும் தொடர்புடையதன்று. இவை திருமணமுறையையும், மரபு முறையையும் நெறிப்படுத்திக் காட்டும் சமுதாய அலகாகவும் செயற்படுகின்றன. ஒரு குலக்குறியைக் கொண்ட குலத்தவர்கள் அனைவரும் தாய் அல்லது தந்தைவழியில் வரும் ஒரு வழி மரபினராய் உள்ளனர். ஆதலினால் இவர்கள் இரத்த உறவினராய் இருப்பர். இதனால் மணத்துணையை வேறு குலத்திலிருந்து தேர்ந்தெடுக்கின்றனர். அதாவது புறமணம் என்பது ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்கள் தங்கள் குழுவுக்குள்ளேயே மணம் செய்து கொள்ளாமல் வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களை மணம் செய்யும் முறையாகும். ஒரே கால்வழி குடிவழி என்பவற்றைச் சேர்ந்தவர்கள் இரத்த உறவுடையவர்கள் என்பதால் பல சமுதாயங்களில் இக்குழுவுக்குள்ளே இடம்பெறும் திருமணங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

அடுத்து பொதுமை என்ற பண்பு குலக்குறியில் காணப்படுகின்றது. ஒரு குலக்குறிக் குழுவினர் மற்றொரு குழுவைச் சண்டையில் வென்றுவிட்டால் வென்ற குழுவின் சின்னம் எல்லாக் குழுக்களின் வணக்கத்திற்குரியதாக மாறிவிடும். யானை ஒரு குழுவின் குலக்குறி. இந்தக் குழு பெரிதாகிப் பல குழுக்களை வென்று ஏனைய குழுக்களை தனக்குக் கீழ் கொண்டு வந்தால் அது அரசாக மாறும் போது யானை அதனுடைய கொடியாக மாறுகின்றது. இலங்கையின் தேசிய கொடி என்றாலே வாளேந்திய சிங்கம் தான். இதனை சிங்கக் கொடி எனவும் அழைப்பர். துட்டகைமுனுவின் கொடியில் சிங்கம் இருந்தது என்றும், அதனை எல்லாளனுடனான சண்டையின் போது பயன்படுத்தி வெற்றி பெற்றதால் இலங்கைத் தீவு முழுவதுக்குமான தேசிய கொடியாக காணப்படுகின்றது.

குலக்குறியவழிபாடானது அகவய நம்பிக்கையை குறிக்கின்றது. சமூக விலக்குகளை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்கி குறித்த குழுவில் அற ஒழுக்கங்களை விதைக்கின்றன. குலக்குறியை உண்ணவோ, கொல்லவோ மறுப்பர். உதாரணமாக இந்து சமயத்தில் புலால் உண்ணாமையை குறிப்பிடலாம். இதன் மூலம் பசுவை கொல்லவோ வதைக்கவோ முடியாது என்பது இச்சமய ஒழுக்கமாகும்.

இனமரபுச் சின்னம் என்பது ஒரு பெயர், ஒரு தனிக்குறி, ஒரு மதக் குணத்தைக் கொண்ட ஒரு கூட்டு அடையாளக் குறிப்பு என்பது இவரது கருத்தாகும். எடுத்துக்காட்டாக கிறிஸ்தவ சமயத்தில் புனிதச் சின்னமாக 'வைன்' சுட்டிக்காட்டப்படுகின்றது. தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் இரத்தக்

கறையாக இவர்கள் இதனைச் சுட்டுவர். இது குடிவகையாக அல்ல. புனிதப் பொருளாகவும், வழிபாட்டு முறையின் பகுதியாகவும் கருதப்படுகின்றது. இதனால் கிறிஸ்தவ சமயத்தவர்களது சடங்குகளில் (திருமணம்) வைன் ஒரு குடிபாணமாக இல்லாமல் கூட்டு உணர்வை வெளிப்படுத்தும் புனித சின்னமாக பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் (Social mind) ஒன்றுபட்ட வெளிப்பாடாக (Collective Representation) அமையப்பட்டதே குலக்குறி என்பார் டுர்கைம். இதன் மூலம் சமூக ஒருமைப்பாடும், கூட்டுணர்வும் வெளிப்படுகின்றது. உதாரணமாக சங்க காலத்தில் மக்கள் மிகவும் இயற்கையோடு பின்னிப் பிணைந்தவர்களாக காணப்பட்டனர். முல்லை நிலத்து மக்கள் திருமணச் சடங்கின் போது பெண் எருமையின் கொம்பை நட்டு வழிபாடு செய்தனர். நெய்தல் நில மக்கள் மீன் வளத்தை பெருக்க சுறாவின் கொம்பை நட்டு வழிபட்டனர்.

குலக்குறியம் என்பது மனா அல்லது கடவுள் சமூகத்தின் சின்னமாகக் காணப்படுவதால் கடவுளும், சமூகமும் ஒன்று என இக் குலக்குறிவாதம் தெளிவுபடுத்துகின்றது. கற்பனையால் உருவாக்கப்பட்ட மனா அல்லது கடவுள் மற்றும் கண்ணுக்கு புலப்படுகின்ற இனமரபுச் சின்னம் மூலமாக ஒரு பொதுக் குடி மரபுக்குழு உண்டாக்கப்படுகின்றன. இதனால் மனிதன் கடவுளுக்கும், சமூகத்திற்கும் கீழ்ப் படிந்து நடக்கின்றான். இதனால் குலக்குறியத்தை வழிபடுபொருளாக கொண்டு கூட்டுணர்வுடன் ஒன்றித்து வாழ வழிவகுக்கின்றான்.

இவ்வாறான பண்புகளை கொண்ட குலக்குறியவாதமானது வழிபாட்டம்சமாக சமூகத்தில் நிலைகொண்டுள்ளது. ஒவ்வொரு தனிநபரோடும், சமூகத்தோடும் பின்னிப்பிணைந்ததாக காணப்படுகின்றது.

எதிர்காலம் எப்படியிருக்கும் என கணிக்கமுடியாத நிலையில் தோன்றும் ஒரு பயம் கலந்த எதிர்பார்ப்பிற்குரிய நம்பிக்கையின் அடையாளமாக குலக்குறியவாதம் காணப்படுகின்றது. குலக்குறியானது மக்களுக்கு பாதுகாப்பை அளிக்கின்றது. ஒவ்வொரு பழங்குடியினருக்கும், குலக்குறியம் மிகவும் புனிதமானது. பழங்குடி வாழ்வில் ஒவ்வொரு குலக்குறியும் மத முக்கியத்துவம் வாய்ந்தது. பல பழங்குடியினர் தங்கள் உடலின் சில குறிப்பிட்ட இடத்தில் அல்லது அவர்களின் வீடு அல்லது பூஜை அறையின் சுவரில் குலக்குறி அடையாளம் அல்லது உருவத்தை பொறிக்கிறார்கள். குலக்குறியின் வடிவம் அல்லது உருவம் கூட உருவாக்கப்பட்டு அவற்றின் புனித இடங்களில் வைக்கப்படுகிறது. குலக்குறியின் ஆசீர்வாதங்கள் பழங்குடி மக்களை எல்லா கடினமான சூழ்நிலைகளிலும் மற்றும் எல்லா கடினமான நேரங்களிலும் பாதுகாக்கின்றன என்று உணரப்படுகிறது. இது சாத்தியமான ஆபத்து குறித்து உறுப்பினர்களை எச்சரிக்கிறது மற்றும் எதிர்காலத்தைப் பற்றி முன்னறிவிக்கிறது (Baalusami, 1991).

குலக்குறிய வழிபாடானது இயற்கை உலகத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பினைப் பேணுவதோடு இதன் மூலம் உயிரின பல்வகைமைத்தன்மையும், சூழல் சமநிலை பேணவும் உதவுகின்றது. குலக்குறியை தம் குலமாக கொண்ட குழுக்கள் இயற்கையின் மீதான அவர்களின் அன்பையும், சுற்றியுள்ள சுற்றுச்சூழல், விலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். தாவரம், விலங்குகள், பறவைகள், ஆறுகள், நீர்நிகைள் மரங்கள் குலக்குறியாக விளங்குவதால் அவற்றை கொல்லவோ, வெட்டவோ விலக்கு காணப்படுகின்றது. இது சூழல் சமநிலையைப் பேணுவதோடு, உயரினப் பல்வகைமை அழிப்பையும் தடுக்கின்றது. இதன் மூலம் இயற்கைக்கும், சமூகத்திற்கும் இடையிலான பிணைப்பு மேலோங்குகின்றது.

ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய சமுதாயம் சுட்டிக்காட்டும் நெறிமுறைகளையும், விழுமியங்களையும் முறையாகப் பின்பற்றி நடப்பதால் மட்டுமே அச்சமுதாயம் நிலைபெறும். இதனை விலங்கு, தாவரம், இயற்கைப் பொருளினூடான நம்பிக்கையை ஏற்படுத்தி புனிதத் தன்மையை தோற்றுவிக்க குலக்குறியம் ஒரு கோட்பாட்டுத் தளத்தில் நின்று துணைபுரிகின்றது.

குலக்குறியவழிபாடானது சமூகத்தை ஒன்றிணைத்துக் கட்டுக்கோப்பாகச் செயற்பட வைப்பதில் பெரும்பங்காற்றுகின்றது. அதாவது சமூகத்தில் கூட்டுணர்வை ஏற்படுத்தி சமூகப்பிணைப்பு மிகுதியாவதற்கு ஒவ்வொரு குலத்திற்கும் குறியீடாக நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படுகின்றது.

சமூக விலக்கு என்ற விடயத்தினூடாக சமயத்தின் புனிதத்தன்மையை பேணுகின்ற வாதமாக குலக்குறியம் காணப்படுகின்றது. அதாவது மக்கள் மத்தியில் பயங்கலந்த நம்பிக்கையை ஏற்படுத்தி தமக்குரிய வழிபாட்டு அம்சங்களை பேணுகின்ற விடயமாக திகழ்கின்றது. எனவே சமூகக் கட்டுப்பாட்டை பேணி ஒழுக்காற்றுச் செயல், ஒருங்கிணைந்த செயல், பேணுகின்ற செயல், மதிப்பார்ந்த செயல் ஆகியவற்றினூடாக சமூக ஒழுங்கையும், கூட்டுப் பொருண்மையையும் ஏற்படுத்துவதில் குலக்குறியமானது இன்றியமையாத பங்களிப்பு செய்வது அதன் சிறப்பம்சமாகும்.

குலக்குறியவழிபாடானது அகவய நம்பிக்கையைக் கொண்டு விளங்குவதால் மனிதனுக்கு உளவியல் ரீதியான பாதுகாப்புணர்வை வழங்குகிறது. மனிதனால் விடைகாண முடியாத வினாக்களுக்கு வெற்றியை நோக்கி செயற்பட துணைபுரிகின்றது. மேலும் காலம், வெளி என்பவற்றை குலக்குறியை கொண்ட சடங்குகளின் மூலம் புனிதப்படுத்துவதாக இவ்வாதம் காணப்படுகின்றது.

சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள், சமூகக்கட்டமைப்பில் ஏற்படும் பிறழ்வுகளுக்கு இனம், குலம் ஆகியவற்றின் சின்னம் என்ற தன்மையை உளரீதியாக திருப்திப்படுத்தி அந்த நிலைமைகளை ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. இதன் மூலம் சமூகப் பிணைப்பையும், சமூக ஒருங்கிசைவையும் ஏற்படுத்தி மனித உள்ளத்தின் அடையாளத்தில் ஒரு வகையான அமைதி நிலையை வழங்குகின்றது. உதாரணமாக சாதி, மதப் பிரச்சினைகளை குறிப்பிடலாம்.

'விலக்கு' என்ற தன்மையை இவ்வாதமானது சிறப்பியல்பாக கொண்டுள்ளதால் சமூகத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை ஓரளவு தணிக்கவும் உதவுகின்றது. எனவே குறிப்பிட்ட குழுமத்தினர் மத்தியில் மிகவும் ஒருமைப்பாடான உணர்வுகளையும், உளப்பாங்குகளையும் கட்டமைக்கின்ற வல்லமையும் குலக்குறியவாதத்திற்கு உண்டு. குலக்குறியவாதமானது பழமையான விடயமாக தென்பட்டாலும் கூட அது மிகப் பிரமாண்டமாக சமூகக் கட்டமைப்போடு தொடர்பை பேணுவது இதன் சமூக நிலைப்பாடாகும்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கும் போது குலக்குறியவாதமானது ஒரு கோட்பாடாக மட்டுமின்றி பழங்குடி மக்களின் வழிபாட்டு முறையாகவும் காணப்படுகின்றது. அத்துடன் குலக்குறிய வாதத்தின் பண்புகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்தி ஒன்று இருப்பதை வெளிப்படுத்துவதோடு இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பையும் வெளிப்படுத்தி சமூகத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

## முடிவுரை

இவ்வாய்வுக் கட்டுரையானது குலக்குறியவாதம் பற்றிய விளக்கம், அதன் தோற்றப்பின்னணி, குலக்குறியவாதத்தின் பண்புகள், அதன் சமூக நிலைப்பாடு என்பவற்றை சமூக, மானிடவியல் நோக்கில் வெளிப்படுத்தி நிற்கின்றது. குலக்குறியானது ஒரு மதக்கொள்கையாக வழிபாட்டம்சமாக இருந்து சமூகத்தின் இயக்காற்றலையும், நிலையமைப்பையும் தீர்மானிக்கின்றது. குலக்குறி தொடர்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகளும், பின்பற்றப்படும் நம்பிக்கைகளும் அதன் புனிதத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன. எனவே சமுதாய நிலையமைப்பிற்கும், சமூக இயக்காற்றலுக்கும், சமூக ஒருமைப்பாட்டிற்கும், கூட்டுணர்விற்கும், தனிமனித மற்றும் சமூக நடத்தையை தீர்மானிப்பதற்கும், இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பையும் வெளிப்படுத்துவதற்கும் சமயம் சார் சடங்குகளும், வழிபாட்டம்சங்களும் இன்றியமையாதனவாக காணப்படுகின்றன என்பது இவ்வாய்வுக்கட்டுரை மூலம் தெளிவாகின்றது.

## References

Baalusami, N. (1991), Vaalviyadkalanjiyam, Vol 7, Tamil University, Thanjavur, India.

Bhaktavatsala Bharathi, S. (2018), Cultural Anthrolology, Adaiyaalam, Tamilnadu, India.

Durkheim, E. (2001). The Elementary Forms of Religious Life, Oxford University Press, United Kingdom.

Goswami, M.P (2018), Totemism and Tribes: A Study of the Concept and Practice. Retrieved from: https://www.researchgate.net/publication/326655380_Totemism_and_Tribes_A_Study_of_the_Concept_and_Practice/

Robinson, A. (2006), Essays in Sociology, Poobalasingham Book Depot.

Shanmugalingan, N. (2008), Samookaviyal Kodpaddu Moolangal, Nagalingam Noolalayam, Jaffna.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Rajendran Kirushikkah, Totemism in Religious Theories: A Social Anthropological Perspective, Indian Journal of Tamil, 3(4) (2022) 15-22. https://doi.org/10.54392/ijot2242